S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன்
காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01	ISSUE: 321	14.05.2026	THURSDAY	CHITHIRAI: 31	PRICE : RS.5/-
மலர் : 01	இதழ் : 321	14.05.2026	வியாழக்கிழமை	சித்திரை : 31	விலை : ரூ.5/-

நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி

"ஆட்சியை தக்க வைத்தது தவெக!"

முதல்வர் விஜய்யின் ஜோதிடருக்கு வழங்கப்பட்ட அரசுப் பதவி ரத்து

சென்னை: மே.14-
விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்று தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பில், " ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேலை முதல்வரின் சிறப்புப் பணி (அரசியல்) அதிகாரியாக நியமிப்பது தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இதன்மூலம் ரத்து செய்யப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நேற்று

நியமனம் செய்யப்பட்டார். இதுகுறித்து நேற்று தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், 'தமிழக முதல்வரின் அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்கான சிறப்பு அதிகாரியாக ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்படுகிறார். அவர் பொறுப்பேற்கும் தேதியில் இருந்து இந்த நியமனம் அமலுக்கு வரும். இதற்கான பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்துத் தனியாக அறிக்கை வெளியிடப்படும்' என குறிப்பிடப்பட்டது.

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதற்கு திமுக, காங்கிரஸ், விசிக, சிபிஎம், சிபிஐ உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. மேலும், இன்று சட்டப்பேரவையில் பேசிய தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா, ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், தவெக அரசு அந்த உத்தரவை ரத்து செய்துள்ளது.

"குதிரை பேரம் புகார்களுக்கு முதல்வர் விளக்கமளிக்க வேண்டும்" : பிரேமலதா விஜயகாந்த்

சென்னை: மே.14-
குதிரை பேரம் நடந்ததாக எதிர்க்கட்சிகள் அனைவரும் குற்றம்சாட்டும் நிலையில், அது குறித்து முதல்வர் விஜய் பேச வேண்டும் என தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சட்டப்பேரவையில் பேசும்போது, "எதிர்க்கட்சிகளை எதிரிக் கட்சிகளாக நினைக்காமல் அனைவரையும் சந்தித்து ஒரு மாண்பையும், மரபையும் முதல்வர் விஜய் ஏற்படுத்தியிருக்கிறார். அதை நான் வரவேற்கிறேன்; அதேபோல முதல் அறிவிப்பிலேயே சிங்கப் பெண் படை, மதுக்கடைகளை மூடுவோம் என்று சொன்னதும் மக்களால் வரவேற்கப்பட்டது. அந்த வகையில் 717 மதுக்கடைகளை மூடியது ஒட்டுமொத்த தமிழக மக்களாலும் வரவேற்கப்பட்டது. மீனவர்கள் விவகாரம் குறித்து கடிதம் எழுதியதும் வரவேற்கத்தக்கது.

முதல்வர் பதவி ஏற்கும்போது, தனது ஆட்சி வெளிப்படையான ஆட்சியாக இருக்கும் எனச் சொன்னீர்கள். சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். குதிரை பேரம் நடந்ததாக எதிர்க்கட்சிகள் அனைவரும் குற்றம்சாட்டுகின்றன. இதுவரை தமிழக அரசியல் வரலாற்றில் நடந்தது இல்லை. இது குறித்து இன்று பேசவே மனவேதனை அடைகிறேன்.

யாரும் முகத்தை மூடிக்கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை என முதல்வர் விஜய் கூறியிருந்தார்; ஆனால் முதல்வரை சந்திக்க முகத்தை மூடிக்கொண்டு வந்தது யார் என பதிலளிக்க வேண்டும். குதிரை பேரம் நடந்ததாக ஏராளமானோர் கூறியிருக்கும் நிலையில் அது குறித்து முதல்வர் பேச வேண்டும்.

முதல்வரின் அரசியல் பிரிவில் ரத்தன் பண்டிட்டை நியமனம் செய்ததற்கு ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு இருக்கிறது. அவரை அரசு உயர் பதவியில் கொண்டு வந்தது ஏற்புடையதல்ல. இளைஞர்கள் நம்பிக்கையில் வாக்கு அளித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படும்; தேவைபட்டால் முதல்வருக்கு தனிபட்ட முறையில் நியமித்துக் கொள்ளலாம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, முதல்வர் விஜய்யின் சிறப்பு அதிகாரியாக ரத்தன் பண்டிட் நியமிக்கப்பட்ட உத்தரவை தமிழக அரசு திரும்பப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

சென்னை, மே.14-
தமிழக சட்டசபையில் தவெக அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

முதல் அமைச்சர் விஜய் கொண்டு வந்த நம்பிக்கை தீர்மானம் மீதான விவாதத்திற்கு பிறகு வாக்கெடுப்பு நடைமுறை தொடங்கியது. உறுப்பினர்களை எண்ணிக் கணிக்கும் நடைமுறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் அறிவித்தார். வெளியில் சென்ற உறுப்பினர்களை அவைக்கு அழைக்கும் வகையில் 3 முறை மணி ஒலிக்கப்பட்டது.

பின்னர் பேரவையின் நுழைவு வாயில்கள் அனைத்தையும் மூடும்படி அவைக்காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். கதவுகள் மூடப்பட்டதும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 144 எம்.எல்.ஏ.க்கள் வாக்களித்தனர். 22 எம்.எல்.ஏ.க்கள் எதிராக வாக்களித்தனர். 5 எம்.எல்.ஏ.க்கள் நடுநிலை வகித்தனர். இதையடுத்து தீர்மானம் வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார். வாக்கெடுப்பின் போது திமுக எம்.எல்.ஏ.க்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

144 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவுடன் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியை தக்க வைத்தது.

"தூய சக்தியா... அடுத்த கட்சி எம்எல்ஏக்களை 'தூக்கும்' சக்தியா?" : தவெக மீது ஸ்டாலின் பாய்ச்சல்

சென்னை: மே.14-
"இது தூய சக்தியா அல்லது அடுத்த கட்சி எம்எல்ஏக்களைத் தூக்கும் சக்தியா என தமிழக வெற்றிக் கழகத்துக்கு வாக்களித்த மக்களே வருந்திப் பேசும் நிலை உருவாகிவிட்டது" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடுமையாக சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழக வெற்றிக் கழக ஆட்சி அமையவோ, தொடரவோ திராவிட முன்னேற்றக் கழகம் தடையாக இருக்காது என்ற எனது நிலைப்பாட்டுக்கேற்ப திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று சட்டமன்றத்தில் இருக்கும் எங்கள் தோழமை இயக்க உறுப்பினர்களான பிரேமலதா விஜயகாந்த், ஜவாஹிருல்லா,

தமிமுன் அன்சாரி, நித்தியானந்தம் ஆகிய உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகிய தோழமைக் கட்சிகள், தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். அவர்களின் நிலைப்பாட்டையும் நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால், இந்த ஆட்சி அமைய வழிவகுத்த எல்லாருடைய நம்பிக்கையையும் சிதைக்கும் வேலையில தமிழக வெற்றிக் கழகம் இறங்கியிருக்கிறது. அதற்கு சாட்சி, ஆளுங்கட்சியின் கடந்த 3 நாட்களின் செயல்பாடுகளும், அதற்கு எங்கள் தோழமைக் கட்சியினர் கொடுத்த அறிக்கைகளும்தான்.

ஆட்சி நிலைக்கத் தேவையான எண்ணிக்கை எங்கள் தோழமை இயக்க நிலைப்பாட்டால் இருந்தாலும், இன்றைய ஆளுங்கட்சி என்ன செய்திருக்கிறது? தூய அரசியல் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், அழுக்கு அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பிளவுபட்ட அதிமுக எனும் குழம்பிய குட்டையில மீன் பிடிக்க முயற்சி செய்து, அவர்களின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். "உங்களோட தொடக்கமே இப்படி இருந்தா முடிவு எப்படி இருக்கும்? இது தூய சக்தியா இல்ல, அடுத்த கட்சி எம்எல்ஏக்களைத் தூக்குற சக்தியா?" எனத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு வாக்களித்த மக்களே வருந்திப் பேசும் நிலை உருவாகிவிட்டது.

முதல்வரே, உங்கள் செயல்பாடுகளை மக்கள் தொடர்ந்து பார்க்கிறார்கள். அடுத்து, பிளவுபட்ட அதிமுக உறுப்பினர்களுக்கு நீங்க என்ன 'ரிடர்ன் கிஃப்ட்' கொடுக்கப் போகிறீர்கள் என்பதையும் மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து தன் கொள்கையில உறுதியாக இருந்து, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும்' என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"இன்ஸ்டா ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள்" : பேரவையில் விஜய்க்கு உதயநிதி அறிவுரை

.சென்னை: மே.14-
"இன்ஸ்டா ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள்" என தமிழக முதல்வர் விஜய்க்கு சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், "ஆளுங்கட்சி 4.93 கோடி வாக்குகளில் 1.72 கோடி தான் பெற்றுள்ளது. மீதமுள்ள 3.21 கோடி பேர் உங்களுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். 65% மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்த ஆட்சி மீது எங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கே கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை குறைந்து வருகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மை மக்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை. நம்பிக்கையின்றி முதல்வர் விஜய் 2 இடங்களில் போட்டியிட்டார். 2 இடங்களில் வெற்றி பெற்ற விஜய் ஒரு இடத்தில் ராஜினாமா செய்திருக்கிறார். ஆனால், தொகுதி மக்களுக்கு இதுவரை ஒரு நன்றி கூட தெரிவிக்கவில்லை.

திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன்தான் தவெக ஆட்சி

அமைத்துள்ளது. குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே, அவர்கள் உங்களுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுத்துள்ளார்கள். இப்போதும் நாங்கள் திமுக கூட்டணியில்தான் இருக்கிறோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உங்கள் கொள்கை எதிரி என்று சொன்ன பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் போட்டியிட்ட சட்டமன்ற உறுப்பினரை அந்தக் கட்சித் தலைவருக்கே தெரியாமல் உங்கள் கட்சிக்கு ஆதரவு தர வைத்திருக்கிறீர்கள்.

அந்தக் கட்சியின் தலைவர் டிடிவி இது குறித்து பேசும்போது, "ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே குதிரை பேரத்தில் ஈடுபடுகிறார்கள். மாற்றம் மாற்றம் என பேசினார்கள். இது மாற்றமில்லை, துர்நாற்றம்," என சொல்லியிருக்கிறார்.

தற்போது, அதிமுக பிளவு பட்டுள்ளது. அதில் ஒரு பிரிவினர் உங்களுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நடந்துதான் ட்விஸ்ட். அந்தப் பிரிவில் ஒருவரது வீட்டிற்கு புதிய சோஃபா செல்கிறது. பின்னாலேயே புதிய முதல்வரும் செல்கிறார். 'புஷ்பா' பட பாணியில் தான் இந்த ஆட்சி நடைபெற்று வருகிறது.

திமுக கூட்டணிக் கட்சிகள், மற்றும் சில கட்சிகளிடம் இருந்து எம்எல்ஏக்களை கடன் பெற்று ஆட்சி நடத்துகிற முதல்வர், தான் கொடுத்த போலி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனத் தெரிந்த உடனே, திமுக அரசு வளர்ச்சிக்காகப் பெற்ற கடன் குறித்து தவறான தகவல்களைக் கொடுத்து மக்களைத் திசைதிருப்பப் பார்க்கிறார். பெரும்பான்மை இல்லாத இந்த அரசு மக்களுக்கு நல்லாட்சி தரும் என்ற நம்பிக்கை இல்லை.

தமிழக மற்றும் இந்திய வரலாற்றிலேயே கட்சி தாவுவதற்கு முன்னதாகவே, அந்தக் குழுவின் தலைவர் வீட்டுக்குச் சென்று அவருக்கு இன்விடேஷன் கொடுத்ததை இந்தியாவில் யாரும் பார்த்ததில்லை. சிபிகிழிநிணி, சிபிகிழிநிணினு சொன்னீர்களே ஆனால், அதுக்கு பின்னால் ணிஙீசிபிகிழிநிணி இருப்பதாக மக்கள் சந்தேகப்படுகிறார்கள். கூவத்தூரையே மிஞ்சும் அளவிற்கு நீங்கள் அடிக்கிற கூத்தைப் பார்க்கும்போது, இந்த அரசு எத்தனை நாட்களுக்கு நீடிக்கப்போகிறதோ என்ற ஐயம் மக்களுக்கு வரத்தொடங்கிவிட்டது.

நடப்பதையெல்லாம் பார்த்து,'பெரிய தவறை செய்துவிட்டோமோ' என உங்களுக்கு வாக்களித்த மக்களே நினைக்கத் தொடங்கியுள்ளனர். இதை பிரதிபலிக்கும் வகையில் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் வெளிநடப்பு செய்கிறோம்.

மகளிர் உரிமை தொகைக்காக காத்திருக்கிறார்கள். குழந்தைகள் காலை உணவுத் திட்டத்துக்காக காத்திருக்கிறார்கள். நீங்கள் அவகாசம் கேட்டீர்கள். எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், காத்திருப்பவர்களை ரொம்ப காலம் காத்திருக்க வைத்து விடாதீர்கள். இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள். மக்கள் கேட்பதும் அதைத் தான்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை அரசு செவிலியர் கல்லூரி முதல்வர் சங்கர் சண்முகம் உட்பட 15 பேருக்கு பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது

புதுடெல்லி:மே, 14- சர்வதேச செவிலியர் தினத்தையொட்டி மத்திய அரசு சார்பில் சிறந்த செவிலியர்களுக்கு தேசிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருது விழா டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்றது. அப்போது சென்னை அரசு செவிலியர் கல்லூரி முதல்வர் சங்கர் சண்முகம் உட்பட 15 பேருக்கு தேசிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதினை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு

வழங்கினார்.செவிலியர் கல்வியில் 26 ஆண்டு கால சேவையை அங்கீகரிக்கும் வகையில் சங்கர் சண்முகத்துக்கு இந்த விருது வழங்கப்பட்டு உள்ளது. கர்நாடகாவை சேர்ந்த கவிதா, கேரளாவை சேர்ந்த மஞ்சுமோல் உள்ளிட்டோரும் விருதுகளை பெற்றுக் கொண்டனர்.இந்த விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பேசியதாவது: கருணை, அர்ப்பணிப்பு உணர்வு, நாட்டிற்கு சேவையாற்றும் நோக்குடன் செவிலியர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் சேவைகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக தேசிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன. நோயாளிகளைப் பராமரிப்பதில் தாய் உள்ளத்துடன் அவர்கள் செயல்படுகின்றனர். நைட்டிங்கேல் விருது பெற்ற அனைவரையும் பாராட்டுகிறேன். இவ்வாறு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பேசினார்.

நெல்லைக் கொள்முதல் செஞ்சாச்சு... காசு எங்கே? வாடிப்பட்டி குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் ஆவேசம்

வாடிப்பட்டி மே, 14- மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் வட்டாட்சியர் ராமசந்திரன் தலைமையில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் முன்னிலை வகித்தனர்.

*முக்கியப் புகார்கள் மற்றும் கோரிக்கைகள்:*பணம் பட்டுவாடா இழுபறி: அய்யங்கோட்டை, தனிச்சியம், ராயபுரம் கல்லுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட

விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 2 மாதங்கள் ஆகியும், அதற்கான பணம் இதுவரை வழங்கப்படவில்லை. அதனை உடனடியாக வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

மின்சாரப் பிரச்சினைகள்: கோடைகாலத்தில் நிலவும் தொடர் மின் தடையால் மக்கள் அவதிப்பட்டு வருவதாகவும், விவசாய நிலங்களில் சாய்ந்துள்ள மின் கம்பங்களைச் சீரமைக்க வேண்டும் என்றும் புகார் தெரிவிக்கப்பட்டது.

நீர் மேலாண்மை: அய்யர்கண்மாய் ஓடையைச் சீரமைக்க வேண்டும், திருவாலவாயநல்லூர் தடுப்பணையைச் சீரமைக்க வேண்டும் மற்றும் பெரியாறு பாசன கால்வாய்களில் பழுதடைந்த சட்டர்களைச் சரிசெய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதர கோரிக்கைகள்: மூடப்பட்டுள்ள அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையைத் திறக்க வேண்டும் மற்றும் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட கிராமசபைக் கூட்டங்களை மீண்டும் நடத்த வேண்டும் என விவசாயிகள் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

"சசிகலா, தினகரன் உள்ளிட்டோரை மீண்டும் அதிமுகவில் இணைக்க வேண்டும்" எஸ்.பி.வேலுமணி

சென்னை:மே, 14- "சசிகலா, டிடிவி தினகரன் உள்ளிட்டோரை மீண்டும் அதிமுகவில் இணைக்க வேண்டும்" என அதிமுக எம்எல்ஏ எஸ்.பி.வேலுமணி தெரிவித்துள்ளார்.அதிமுகவில் உட்கட்சி பூசல் நிலவி வரும் நிலையில், தமிழக அரசியல் களம் பரபரப்பாக காணப்படுகிறது. இந்நிலையில், செய்தியாளர்களிடம் எஸ்.பி.வேலுமணி கூறும்போது, "நாங்கள் தோல்வி அடைந்ததற்கான காரணத்தை ஆய்வு செய்ய வேண்டும். அதிமுகதான் எங்களின் உயிர் மூச்சு. கட்சியை உடைக்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன்,

ஓபிஎஸ், வைத்திலிங்கம், ஜே.சி.டி பிராபாகர் ஆகியோருக்காகவும் தான் பேசினோம். இபிஎஸ் தான் இப்போதும் பொதுச் செயலாளர். அதில் மாற்றுக் கருத்தில்லை. எடப்பாடி பழனிசாமியை முதல்வர் ஆக்கியதே சசிகலாதான். சசிகலா, டிடிவி தினகரன் உள்ளிட்டோரை மீண்டும் அதிமுகவில் இணைக்க வேண்டும். இப்போதும் கட்சியில் உள்ளவர்களை குறை சொல்லி வெளியே அனுப்பக் கூடாது. திமுகவை எதிர்த்துதான் இக்கட்சி தொடங்கியது. அதிமுகவை பலப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் எண்ணம்" என்று அவர் கூறினார்.

விசாகப்பட்டினத்தில் 65 அடி உயர திரிசூலம்

விசாகப்பட்டினம்: மே,14- ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் 65 அடி உயரத்தில் உடுக்கையுடன் கூடிய திரிசூலம் அமைக்கப்பட்டுள்ளது.விசாகப்பட்டினத்தில் உள்ள கைலாசகிரி மலைப்பகுதி பிரபல சுற்றுலா தலமாகும். இங்குள்ள சிவன், பார்வதி சிலைகள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். வார இறுதி நாட்கள், பண்டிகை நாட்கள் மற்றும் கோடை விடுமுறையில் இங்கு அதிக சுற்றுலாப் பயணிகளை காணலாம்.

இந்நிலையில் இப்பகுதியை மேலும் அழகாக்க, விசாகப்பட்டினம் நகர வளர்ச்சி கழகம் (விஎம்ஆர்டிஏ) இங்கு 65 அடி உயரத்தில் உடுக்கையுடன் கூடிய திரிசூலம் சிலை அமைக்க முடிவு செய்தது. இதற்கான பணி



கள் விரைவாக நடைபெற்று, சமீபத்தில் அமைச்சர் நாராயணா பூஜைகள் நடத்தி திரிசூலத்தை பொது மக்களின் பார்வைக்கு கொண்டு வந்தார். மலை உச்சியில் உள்ள இந்த திரிசூலத்தை நகரில் எந்த இடத்தில் இருந்தும் காண முடியும்.இரவில் எல்இடி விளக்கு வெளிச்சத்தில் திரிசூலம் ஜொலிக்கிறது. 65 அடி உயரம் கொண்ட திரிசூலத்தில் உடுக்கை மட்டும் 18 அடி அகலமும், 10 அடி உயரமும் கொண்டுள்ளது. ரோப்வே உள்ள இந்த மலைக்கு தற்போது சுற்றுலா பயணிகள் அதிகம் வர தொடங்கி விட்டனர். சுமார் 8 மாதமாக திரிசூலம் கட்டுமானப் பணிகள் நடந்தன. சமீபத்தில் இதன் திறப்பு விழா நடந்து முடிந்துள்ளது.

இது குறித்து ஆந்திர கல்வி அமைச்சர் நாரா லோகேஷ் நேற்று சமூக வலைதளத்தில், "குஜராத்தில் உள்ள சோம்நாத் கோயில் புனரமைக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை நாம் கொண்டாடும் இந்த வேளையில், ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் உள்ள கைலாசகிரியில் 65 அடி உயர திரிசூலம் அமைக்கப்பட்டிருப்பது ஆந்திராவுக்கு பெருமை தரும் விஷயமாகும். இது நமது இந்திய கலாச்சாரத்தையும், ஆன்மீகத்தையும் நாட்டுக்கு எடுத்துரைக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

கச்சா எண்ணெய் கையிருப்பு: மத்திய அமைச்சர் ஹர்தீப் விளக்கம்

புதுடெல்லி:மே,14- இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) வருடாந்திர வணிக உச்சி மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி பங்கேற்றார்.

நிகழ்ச்சிக்கு இடையில் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: இந்தியாவில் கடந்த 4 ஆண்டுகளில் எரிபொருள் விலையில் எந்த உயர்வும் ஏற்படவில்லை. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதன் காரணமாக எரிபொருள் கொள்முதல் மற்றும் விநியோகத்தில் உலகின் பல நாடுகள் கடுமையான சிக்கல்களை சந்தித்தன. அந்நாடுகளில் எரிபொருள் விலை 50 % முதல் 60 % வரை உயர்ந்தன. ஆனால் நம் நாட்டில் அத்தகைய சூழல் இல்லை.

இந்தியாவிடம் தற்போது முக்கிய எரிசக்திப் பொருட்களின் கையிருப்பு போதுமான அளவை விட அதிகமாகவே உள்ளது. இதில் 60 நாட்களுக்குப் போதுமான கச்சா எண்ணெய், 60 நாட்களுக்குப் போதுமான எல்என்ஜி, 45 நாட்களுக்குப் போதுமான எல்பிஜி கையிருப்பு உள்ளது. எனவே விநியோகம் சார்ந்த எந்தப் பிரச்சினையும் இல்லை. அரசு நிலைமையை தினமும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. எனவே மக்கள் பீதியடைய வேண்டாம். இவ்வாறு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

போர் பதற்றம் 5 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை கடனாக வழங்கிய அமெரிக்கா

அமெரிக்கா, மே, 14- வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. இதன் விளைவாக பல நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. இதனால் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு தேவையான கச்சா எண்ணெய் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நெருக்கடி காரணமாக பல ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட ஸ்பிரிட் ஏர் லைன்ஸ் (Spirit Airlines) விமான நிறுவனம் மூடப்பட்டது. மேலும் பல எண்ணெய் நிறுவனங்கள் கச்சா எண்ணெய் கிடைக்காமல்

மூடக்கூடிய அபாயம் ஏற்பட்டது. அமெரிக்கா அரசாங்கம் போர் கால அடிப்படையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கச்சா எண்ணெயில் இருந்து சுமார் 9 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை வழங்குவதாக அறிவித்தது. அதன் தொடக்கக் கட்டமாக தற்போது 5.33 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் கடன் அடிப்படையில் எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் எக்ஸான் மொபில் (ExxonMobil), மராத்தான் பெட்ரோலியம் (Marathon Petroleum) மற்றும் டிராபிகுரா (Trafigura) உள்பட 9 நிறுவனங்களுக்கு இந்த எண்ணெய் வழங்கப்படுகிறது. அவற்றில் டிராபிகுரா (Trafigura) நிறுவனம் மட்டும் சுமார் 1.3 கோடி பீப்பாய் எண்ணெயைப் பெறுகிறது. இவ்வாறு கடன் அடிப்படையில் பெறப்படும் எண்ணெயை 2029ஆம் ஆண்டுக்குள் வட்டியுடன் 24 சதவீதம் கூடுதல் கச்சா எண்ணெயை மீண்டும் அரசிடம் ஒப்படைக்க நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது

டிரம்புக்கு மருத்துவ பரிசோதனை

வாஷிங்டன்:மே,14- அமெரிக்காவில் மிக அதிக வயதில் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டிரம்புக்கு 79 வயதாகிறது. இந்த நிலையில் வரும் 26ம் தேதி வால்டர் ரீட் தேசிய ராணுவ மருத்துவ மையத்தில் டிரம்புக்கு மருத்துவ பரிசோதனைகள் நடக்கிறது. அப்போது பல் மருத்துவரையும் அவர் சந்திக்க உள்ளார். இது வருடாந்திர உடல் பரிசோதனை என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் கரோலின்

லீவிட் தெரிவித்தார்.செய்தி அறிவிப்புகள் அதிபர் டொனால்ட் டிரம்ப், பதவியேற்ற பிறகு மருத்துவ நிபுணர்களை நான்காவது முறையாக சந்திக்க உள்ளார். வயது மற்றும் உடற்தகுதிப் பிரச்னைகளுக்காக முன்னாள் அதிபர் ஜோ பைடனை அடிக்கடி விமர்சித்து வரும் டிரம்ப், தனக்கு வயது முதிர்வு ஏற்பட்ட போதிலும் நன்றாக உணர்கிறேன் என்று கூறியுள்ளார். கடந்த வாரம் தனது உடற்பயிற்சி குறித்து பேசுகையில், ஒரு நாளைக்கு அதிகபட்சமாக சுமார் ஒரு நிமிடம் உடற்பயிற்சி செய்வதாக நகைச்சுவையாக குறிப்பிட்டா

■ புதுவை முதலமைச்சர் ரங்கசாமி முதல் கையெழுத்து ரூ 3 லட்சம் மருத்துவ காப்பீடு. புதுச்சேரி வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கும், முதலமைச்சரின் காப்பீடு திட்டத்தை விரிவுபடுத்தி, ரூ 3 லட்சத்திற்கு மருத்துவ காப்பீடு.

போர் பதற்றம் நீடித்தபடியே இருந்தால் இந்தியாவில் எரிபொருள் விலை உயர்வை தவிர்க்க முடியாது RBI கவர்னர்

டெல்லி::மே, 14- மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றத்தின் விளைவாக, கச்சா எண்ணெய் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இந்த சூழலில் இந்தியாவிலும் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

குறிப்பாக போர் பதற்றம் இன்னும் நீண்ட காலத்திற்கு நீடிக்குமானால் நம் நாட்டில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் மேலும் அதிகரிக்க கூடும். இதனிடையே எரிபொருள் விலை உயர்வு பற்றி பேசி இருக்கும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரான சஞ்சய் மல்ஹோத்ரா, உலகளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. தற்போது இந்தியாவில் இந்த விலை உயர்வினால் ஏற்படும் கூடுதல்

சுமையை அரசுக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிறுவனங்கள் தாங்கிக் கொண்டு வருகின்றன.ஆனால் இந்த சூழல் நீண்ட காலத்திற்கு நீடிக்குமேயானால், விலை உயர்வினால் ஏற்படும் சுமையின் ஒரு பகுதியை அரசாங்கம் தவிர்க்க முடியாமல் வேறுவழியின்றி நுகர்வோர் மீது சுமத்த வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டார். ஏனெனில், அதிகரித்து வரும் கச்சா எண்ணெய் விலையானது பணவீக்கம், எரிபொருள் இறக்குமதி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் மீது தொடர்ந்து அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி இருக்கிறார். தற்போதைய உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மேலும் மோசமடைந்தால், சில்லறை எரிபொருள் விலைகளை மாற்றாமலேயே வைத்திருக்க அரசால் முடியாமல் போகலாம் எனவும் கூறி இருக்கிறார். அந்நிய செலாவணி கையிருப்பை பாதுகாக்க எரிபொருள் நுகர்வைக் குறைக்க நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில், சஞ்சய் மல்ஹோத்ராவின் இந்த கருத்து பொதுமக்களிடையே எரிபொருள் விலையேற்றம் குறித்து கவலையை ஏற்படுத்தி இருக்கிறது

"திருமாவளவனை முதல்வராக்க மறுத்தார் பழனிசாமி" சி.வி.சண்முகம் தடாலடி

சென்னை:மே, 14- விசிக தலைவர் திருமாவளவனை முதல்வராக்க திமுக முன்மொழிந்ததாகவும், ஆனால் அதனை பழனிசாமி திட்டவட்டமாக மறுத்துவிட்டதாகவும் அதிமுக எம்.எல்.ஏ சி.வி.சண்முகம் தெரிவித்துள்ளார்.இது குறித்து செய்தியாளர்களிடம் கூறும்போது, "பெரும்பான்மை அதிமுக எம்எல்ஏக்களான நாங்கள் அரசுக்கு ஆதரவாகவும், சிறுபான்மை அதிமுக எம்எல்ஏக்கள் சிலர் அரசுக்கு எதிராகவும் வாக்களித்துள்ளனர். அதிமுகவின் கொறடா என யாரும் அங்கீகரிக்கப்படவில்லை. அதனால், அவரின் உத்தரவு செல்லாது. அதிமுக எம்எல்ஏ.க்கள் 47 பேரிடமும் கையெழுத்து பெற்றேன் எனக் கூறும் இபிஎஸ், எப்போது எங்கே கையெழுத்து போட்டார்கள் என்று கூற முடியுமா? தைரியம் இருந்தால் அதனை வெளியே காட்ட முடியுமா? தங்களுக்கு ஆதரவு இல்லை என்பதை மறைப்பதற்காக இவ்வாறு பேசுகிறார். 47 பேர்

என்னை ஆதரிக்கிறார்கள் என சபாநாயகரிடம் இபிஎஸ் தரப்பு வழங்கியது போலியான கடிதம்.

புதுச்சேரி ரிசார்ட்டில் என்ன செய்தார் என்பதை இபிஎஸ் சொல்வாரா? புதுச்சேரி கூட்டத்தில் தான் முதல்வராகப் போவதாக தெரிவித்தார். திமுக ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைக்கும் என கூறினார் . ஆட்சியமைக்க டெல்லியில் பேசி, அனுமதி பெற்றுவிட்டதாகவும் சொன்னார். நீங்கள் அனைவரும் அமைச்சராகலாம் என ஆசை வார்த்தை கூறினார். சட்டமன்ற உறுப்பினர்களை இபிஎஸ் மிரட்டவும், அச்சுறுத்தவும் பார்க்கிறார்.தேர்தல் முடிவு அன்று வெற்றிச் சான்றிதழ் வாங்கிய உடன் 2 திமுக முன்னாள் அமைச்சர்கள் என்னுடைய லைனுக்கு வந்து என்னென்னமோ பேசினார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால், மறுநாள் காலையில்தான் இபிஎஸ் ஆட்சியமைக்க போகிறோம். திமுக ஆதரவு கொடுக்கும் என சொன்னார். அப்போதுதான் எனக்குப் புரிந்தது. அந்த 2 முன்னாள் அமைச்சர்கள் யாரென்று கேட்காதீர்கள். நான் சொல்ல மாட்டேன். திமுகவை எதிர்த்து தொடங்கப்பட்ட இயக்கம் அதிமுக. அவர்களுடன் கூட்டணி வைக்க எப்படி தொண்டர்கள் ஒத்துக் கொள்வார்கள். என் மனைவி கூட சோற்றில் விஷம் வைத்துவிடுவார் என நான் கூறினேன். அதிமுக தோல்வியை சந்தித்திருக்கிறது. அதை ஏற்க மனமில்லாமல், 47 இடங்களில் வெற்றி பெற்றதை மிகப் பெரிய வெற்றி என்று கூறுகிறார். இப்படிப்பட்டவரை பொதுச் செயலாளராக வைத்து என்ன செய்ய முடியும்?ஜெயலலிதாவைப் போல தோல்விக்கு பொறுப்பேற்கிறேன் என கூறும் தைரியம் அவருக்கு உள்ளதா? வெற்றி, தோல்வியை சரிசமமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவருக்கு அந்த மனப் பக்குவம் கிடையாது. இதுவரை எந்த தோல்விக்கும் பொறுப்பேற்கவில்லை. இந்த தோல்வியில் அனைவருக்கும் பொறுப்புள்ளது. அவரை மட்டும் நான் குற்றம்சாட்டவில்லை.

தமிழகத்துக்கு மிகப்பெரிய வாய்ப்பு ஒன்று வந்தது. அது சமூகத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவரை முதல்வர் ஆக்கலாம் என்ற யாரும் நினைத்து பார்க்காத, சிந்திக்காத ஒரு வாய்ப்பு. திருமாவளவனை முதல்வர் ஆக்கலாம் என திமுகவால் முன்மொழியப்பட்டது. அவர் மட்டும் முதல்வர். மற்ற 33 அமைச்சர் பதவிகளையும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் என சொன்னார்கள்.

ஆனால், விசிக ஆட்சி என்றுதான் வரும் எனக் கூறி இபிஎஸ் அதை ஏற்க மறுத்தார். நான்தான் முதல்வர் இல்லையென்றால், நாம் எதிர்க்கட்சியாக செயல்படுவோம் என்று சொல்லிவிட்டார். எங்களுடைய நோக்கமும் தவெகவின் நோக்கமும் திமுகவை அப்புறப்படுத்த வேண்டும் என்பதுதான். அதனால்தான் நாங்கள் இன்றைக்கு தவெகவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளோம். வேறு எந்த நோக்கமும் கிடையாது. இதனால்தான் எங்களுக்கும் அவருக்கு கருத்து வேறுபாடு வந்தது. திமுகவின் எதிர்ப்பிலே வளர்ந்துள்ளோம். எந்த சூழலிலும் அதிமுக தான் எங்கள் இயக்கம். இன்றுவரை அவர் தான் எங்களது பொதுச்செயலாளர். எங்களை துரோகிகள் என சொல்கிறார், பின்னர் அவர் திமுகவுடன் போகலாம் என சொன்னதுக்கு என்ன அர்த்தம்" என்று அவர் தெரிவித்தார்.

தென்னக ரயில்வேயின் புதிய தலைமை மக்கள் தொடர்பு அதிகாரியாக நரைன் பொறுப்பேற்பு!

சென்னை:மே,14- தென்னக ரயில்வேயின் புதிய தலைமை மக்கள் தொடர்பு அதிகாரியாக நரைன் (2026, மே 13) பொறுப்பேற்றுக் கொண்டார்.Rail Freightஇந்தப்பொறுப்பை ஏற்கும் முன்னதாக, S.N. நரைன் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சரின் தனிச் செயலாளராகப் அயல் பணியில் (deputation) பணியாற்றி வந்தார்.2010ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய இரயில்வே போக்குவரத்து சேவை (IRTS) அதிகாரியான நாராயண், இந்திய இரயில்வேயில் பயணிகள் வசதிகள், செயல்பாட்டுத் திறன், டிஜிட்டல் தகவல் தொடர்பு மற்றும் பொதுத் தொடர்பு தொடர்பான பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்துள்ளார்.நரைன் தென்னக இரயில்வேயின் பல்வேறு கோட்டங்களில் இயக்கம் மற்றும் வணிகப் பிரிவுகளில்

பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார். பின்னர், புது டெல்லிக்கு இடமாற்றம் பெற்று, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறையில் துணைச் செயலாளராகவும், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சரின் தனிச் செயலாளராகவும் பணியாற்றினார்.தமிழ்நாடு செய்திகள்தென்னக இரயில்வேயில் பணியாற்றிய காலத்தில், அவர் திருச்சிராப்பள்ளி கோட்டத்தின் முதுநிலை கோட்ட வணிக மேலாளர், தென்னக இரயில்வேயின் துணை முதன்மை இயக்க மேலாளர் (போக்குவரத்து பாதுகாப்பு), சென்னை மற்றும் பாலக்காடு கோட்டங்களின் கோட்ட வணிக மேலாளர் மற்றும் சேலம் கோட்டத்தின் கோட்ட இயக்க மேலாளர் உள்ளிட்ட பல முக்கியப் பதவிகளை வகித்துள்ளார். மேலும், இந்திய இரயில்வேயின் பல முக்கியத் திட்டங்கள் மற்றும் கொள்கை முயற்சிகளைச் செயல்படுத்துவதில் அவர் முக்கியப் பங்காற்றியுள்ளார்.நரைன் கோயம்புத்தூரில் உள்ள பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் (PSG College of Technology) மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்றவர். ராயபுரம் லோகோ ஷெட்டின் முதுநிலை கோட்ட மின்சாரப் பொறியாளராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ள செந்தமிழ் செல்வனுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்

மிரட்டும் லோகிதாஸ்...

பாஜக மாஜி மாவட்ட தலைவர்!..

திருச்சி மே,14- .திருச்சி புறநகர் பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாவட்ட தலைவர் லோகிதாசன் என்பவர் கடந்த பாராளுமன்ற தேர்தலில், பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியில் பாஜக கூட்டணியில் வேட்பாளராக களமிறக்கப்பட்ட, இந்திய ஜனநாயக கட்சியின் நிறுவனர் பாரிவேந்தரை டெபாசிட் இழக்கும் அளவிற்கு உள்ளடி வேலை பார்த்தவர்களில், இந்த யோகிதாசனும் ஒருவர் என்றும், முன்னாள் திமுக அமைச்சர் நேருவின் கைப்பாவையாக செயல்பட்டு வந்தார், வருகிறார் என்றும், இதன் மூலமாக ஏகப்பட்ட கட்சி கொடுத்த தேர்தல் பணத்தை அபேஸ் செய்துவிட்டார் என்றும் கடந்த மாதம் நமது நாளிதழில் செய்தி வெளியாகியிருந்தது. இந்த செய்தியை திருச்சி புறநகர்

மாவட்டத்தில் உள்ள பலரும், மாநில தலைவர் நயினார் நாகேந்திரனின் பார்வைக்கு கொண்டு சென்று இருக்கிறார்கள். அதோடு லோகிதாசன் திமுக அமைச்சர் நேருக்கு நெருக்கமானவர் என்றும் கைப்பாவையாக செயல்படுவர் என்றும் தெரியவந்திருக்கிறது. இதனால் பாஜக மாநில தலைமை லோகிதாசன் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கும் என தெரிய வருகிறது. இச்செயல்களால் கொதிப்படைந்த லோகிதாசன், இந்தச் செய்தியை லால்குடி பாரதி மோகன் என்பவர்தான் கொடுத்திருப்பார் என்று கற்பனை செய்து கொண்டு, காவல்துறையில் புகார் கொடுக்க தனக்கு தெரிந்த வட்டாரத்தில் கட்சியினரை அழைத்திருக்கிறார். லோகிதாசன் பேச்சை கேட்டு ஒருவரும் வராத காரணத்தினால் தபால் மூலமாக லால்குடி காவல் நிலையத்திற்கு புகார் அனுப்பி இருக்கிறார். ஒரு தேசியக் கட்சியில் மூன்று முறை மாவட்ட தலைவராக பதவி வகித்த லோகிதாசன் பத்திரிகையில் செய்தியை வந்த செய்தியை காவல்துறையில் புகார் அளிக்க கூடாது, நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும் என்ற அடிப்படை கூட தெரியாமல் காவல் நிலையத்தை அணுகி இருப்பது வெட்கக்கேடான விஷயம். தகவல் அறிந்த நாம் லால்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் செந்தில்குமாரிடம் பேசினோம். அவரோ எங்களுக்கும் தெரியும் சார், பார்த்துக் கொள்கிறோம் என்று கூறினார்.இது மட்டுமில்லாமல் தற்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும், லால்குடி அதிமுக வேட்பாளர் லீமாரோஸ் என்பவரிடம் ஏகப்பட்ட பணத்தை கறந்திருக்கிறார். ஆனால் கட்சியினர் ஒருவருக்கு கூட நயா பைசாவை கூட கண்ணில் காண்பிக்கவில்லை என்று புலம்பித் தள்ளியிருக்கிறார்கள். திருச்சி புறநகரிலும் லால்குடி பகுதிகளிலும் லோகிதாசனை பற்றி பாஜகவினரிடம் கேட்டபோது வண்டி வண்டியாக கொட்டி தீர்க்கிறார்கள். எந்த நேரத்திலும் லோகிதாசனின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு இருக்கிறது என்று விவரம் அறிந்த பாஜகவினர்கள் கூறி வருகிறார்கள். லோகிதாசன் பத்திரிகையில் செய்தி வந்தால் அதற்கு முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதனை இனிமேலாவது தெரிந்து கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டுகின்றோம்.

திருப்பூர் அருகே சாலை விபத்து: காவலர் உள்பட 6 பேர் உயிரிழப்பு

திருப்பூர்:மே,14- திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் அருகே நின்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதிய விபத்தில் காவலர் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

கங்கயத்தை அடுத்த வெள்ளகோவில் உத்தாண்ட குமார வலசு பிரிவு அருகே கோவை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் காவல் சோதனைச்சாவடி உள்ளது. இந்த சோதனைச்சாவடியில் அதிகாலை 3 மணி அளவில் சாலைத் தடுப்பு மீது சவுக்கு பூட்டி ஏற்றி வந்த லாரி மோதியது.இதையடுத்து, லாரியை சிறிது தூரம் தள்ளி நிறுத்திவிட்டு லாரி ஓட்டுநர் மற்றும் பணியில் இருந்த காவலர் ரவிசந்திரன் (45) ஆகியோர் அதனை சரி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அதே திசையில் வேகமாக வந்த கார் காவலர் ரவிசந்திரன், லாரி ஓட்டுநர் மீதும் மோதி விட்டு லாரியின் மீதும் பலமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காவலர், லாரி ஓட்டுநர்,

காரில் இருந்த 4 பேர் என மொத்தம் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்த தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த போலீஸார் 6 பேரின் சடலத்தையும் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், விபத்து குறித்து வெள்ளகோவில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்வர் விஜய் நிதியுதவி அறிவிப்பு: இதனிடையே, "வெள்ளக்கோவில் காவல் நிலைய காவலர் ரவிச்சந்திரன் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். காவலர் ரவிச்சந்திரனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.30 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

திருவள்ளூர் காக்களூர் பைபாஸ் சிக்னலில் 3 சாலைகள் சந்திக்கும் பகுதியில் ரவுண்டானா அமைக்கப்படுமா?: வாகன ஓட்டிகள் எதிர்பார்ப்பு

திருவள்ளூர்:மே,14- திருவள்ளூர் மாவட்ட தலைநகரில் இருந்து சென்னை, பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் திருவள்ளூர் ரயில் நிலையம் ஆகிய பகுதிகளுக்கு தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இயக்கப்படுகின்றன. காக்களூர் பைபாஸ் சாலை வழியாக செவ்வாபேட்டை, வேப்பம்பட்டு, திருநின்றவூர், ஆவடி, தண்ணீர்குளம் மற்றும் பாக்கம் உள்பட பல்வேறு பகுதிகளுக்கும் வாகனங்கள் சென்று வருகின்றன. திருத்தணி, திருப்பதி ஆகிய பகுதிகளுக்கு ஏராளமான வாகனங்கள் திருவள்ளூர் ஜெஎன். சாலை வழியாக சென்றுவருகின்றன. Rail Freightஜெ.என். சாலை, காக்களூர் பைபாஸ் சாலை சந்திப்பு குறுகலாக இருப்பதால் ஆவடியில் இருந்து வரும் வாகனங்களும் ஜெஎன் சாலையில் இருந்து இந்த சாலை வழியாக பிரிந்து செல்லும் வாகனங்களும்

போக்குவரத்து நெரிசலால் சிக்கித்தவித்து வருகின்றன. சமீபத்தில் சாலையை அகலப்படுத்துவதற்காக இடையூறாக இருந்த மின்மாற்றி மற்றும் கட்சி கொடி கம்பங்கள் அகற்றப்பட்டு வளைவு பகுதி அகலப்படுத்தப்பட்டது. இதனிடையே ஜெ.என். சாலை மற்றும் காக்களூர் பைபாஸ் சாலை பிரிந்து செல்லும் சந்திப்பில் வாகன ஓட்டிகள் போக்குவரத்து விதிகளையும் பணியில் ஈடுபட்டுவரும் போக்குவரத்து காவலர்களை மதிக்காமல் செல்வதால் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்பட்டு மக்கள் தவித்து வருகின்றனர். ஆட்டோ, பைக்குகள் ஆகியவை விதிகளை மீறி தாறுமாறாக செல்வதால் அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் போக்குவரத்து காவலர்களும் திணறி வருகின்றனர்.''காக்களூர் பைபாஸ் சாலை மற்றும் ஜெ.என்.சாலை சந்திக்கும் இடத்தில் ரவுண்டானா அமைக்க வேண்டும். இந்த பகுதியில் சிறிய ரவுண்டானா அமைத்தால் வாகனங்கள் முறையாக செல்ல வசதியாக இருக்கும். போக்குவரத்து நெரிசலும் குறையும்'' என்றும் வாகன ஓட்டிகள் கூறுகின்றனர்

கொடைக்கானலில் பிரையண்ட் பூங்காவில் விரைவில் துவங்கவுள்ள மலர் கண்காட்சி

கொடைக்கானல்:மே,14- சர்வதேச சுற்றுலா தலமான கொடைக்கானலின் மையப்பகுதியில் அமைந்துள்ள பிரையண்ட் பூங்காவில் 63வது மலர் கண்காட்சி இன்னும் சில நாட்களில் துவங்க உள்ளது. இதில் மலர் படுக்கைகள் தயார் செய்து லட்சக்கணக்கான நாற்றுகள் மூன்று கட்டமாக நடப்பட்டன. சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஆசியாடிக் லில்லி, ஓரியண்டல் லில்லி மற்றும் கிழங்குகள் நடப்பட்டது.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட ரோஜாக்கள் உட்பட சுமார் 29 வகையான லட்சக்கணக்கான மலர்கள் பூங்காவில் பல வண்ணங்களில் பூத்துக் குலுங்குகின்றன.

தற்போது பிங்க், மஞ்சள், வெள்ளை மற்றும் சிவப்பு நிறங்களில் பூக்கள் பூக்க துவங்கி உள்ளது. மாலை வேளையிலும் சுற்றுலாப் பயணிகள் மலர்களை கண்டு ரசிப்பதற்காக வண்ணமயமான மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோடைக்காலத்தை முன்னிட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகப் பூங்காவைப் பார்வையிடும் அனுமதி நேரமும் மாலை 7 மணி வரை கூடுதலாக நீட்டிக்கப்பட்டுள்ளது

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி: தமிழகத்தில் மே 19 வரை எங்கெல்லாம் மழை வாய்ப்பு?

சென்னை:மே,14- அந்தமான் கடல் பகுதியில் மே 16ம் தேதி தென்மேற்குப் பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது. தென்மேற்கு வங்கக்கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நிலவுவதால் தமிழகத்தில் 19ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெற்கு வங்கக் கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், அந்தமான் நிகோபார் தீவுப் பகுதிகளில் மே 16ம் தேதி வாக்கில் தென்மேற்குப் பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது.இதற்கிடையே, தென்மேற்கு வங்கக்கடல், அதை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக நிலவுகிறது. இதன் காரணமாக

நாளை (மே 14) டெல்டா, மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 15, 16ம் தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதேபோல, 17ம் தேதி தென் தமிழகம், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 18ம் தேதி மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வடக்கு உள் தமிழக மாவட்டங்களிலும், 19ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை நீலகிரி, 15ம் தேதி கோவை, நீலகிரி, 16ம் தேதி தேனி, 17ம் தேதி நீலகிரி, 18, 19ம் தேதிகளில் நீலகிரி, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வெப்பநிலை 81 டிகிரி முதல் 97 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும்.

இன்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு, கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் 3 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, மாஞ்சோலை, ராமநாதபுரம் மாவட்டம் காரடர்ந்தகுடியில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இன்ஸ்டா ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள்" பேரவையில் விஜய்க்கு உதயநிதி அறிவுரை

.சென்னை:மே,14- "இன்ஸ்டா ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள்" என தமிழக முதல்வர் விஜய்க்கு சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.தமிழக சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், "ஆளுங்கட்சி 4.93 கோடி வாக்குகளில் 1.72 கோடி தான் பெற்றுள்ளது. மீதமுள்ள 3.21 கோடி பேர் உங்களுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். 65% மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்த ஆட்சி மீது எங்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கே வாக்களித்த மக்களுக்கே கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை குறைந்து வருகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மை மக்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை. நம்பிக்கையின்றி முதல்வர் விஜய் 2 இடங்களில் போட்டியிட்டார். 2 இடங்களில் வெற்றி பெற்ற விஜய்

ஒரு இடத்தில் ராஜினாமா செய்திருக்கிறார். ஆனால், தொகுதி மக்களுக்கு இதுவரை ஒரு நன்றி கூட தெரிவிக்கவில்லை.திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன்தான் தவெக ஆட்சி அமைத்துள்ளது. குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே, அவர்கள் உங்களுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுத்துள்ளார்கள். இப்போதும் நாங்கள் திமுக கூட்டணியில்தான் இருக்கிறோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.உங்கள் கொள்கை எதிரி என்று சொன்ன பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் போட்டியிட்ட சட்டமன்ற உறுப்பினரை அந்தக் கட்சித் தலைவருக்கே தெரியாமல் உங்கள் கட்சிக்கு ஆதரவு தர வைத்திருக்கிறீர்கள்.

அந்தக் கட்சியின் தலைவர் டிடிவி இதுகுறித்து பேசும்போது, "ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே குதிரை பேரத்தில் ஈடுபடுகிறார்கள். மாற்றம் மாற்றம் என பேசினார்கள். இது மாற்றமில்லை, துர்நாற்றம்," என சொல்லியிருக்கிறார்.தற்போது, அதிமுக பிளவு பட்டுள்ளது. அதில் ஒரு பிரிவினர் உங்களுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நடந்துதான் ட்விஸ்ட். அந்தப் பிரிவில் ஒருவரது வீட்டிற்கு புதிய சோஃபா செல்கிறது. பின்னாலேயே புதிய முதல்வரும் செல்கிறார். 'புஷ்பா' பட பாணியில் தான் இந்த ஆட்சி நடைபெற்று வருகிறது.திமுக கூட்டணிக் கட்சிகள், மற்றும் சில கட்சிகளிடம் இருந்து எம்எல்ஏக்களை கடன் பெற்று ஆட்சி நடத்துகிற முதல்வர், தான் கொடுத்த போலி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனத் தெரிந்த உடனே, திமுக அரசு வளர்ச்சிக்காகப் பெற்ற கடன் குறித்து தவறான தகவல்களைக் கொடுத்து மக்களைத் திசைதிருப்பப் பார்க்கிறார். பெரும்பான்மை இல்லாத இந்த அரசு மக்களுக்கு நல்லாட்சி தரும் என்ற நம்பிக்கை இல்லை.

தமிழக மற்றும் இந்திய வரலாற்றிலேயே கட்சி தாவுவதற்கு முன்னதாகவே, அந்தக் குழுவின் தலைவர் வீட்டுக்குச் சென்று அவருக்கு இன்விடேஷன் கொடுத்ததை இந்தியாவில் யாரும் பார்த்ததில்லை. சிபிகிழிநிணி, சிபிகிழிநிணி னு சொன்னீர்களே ஆனால், அதுக்கு பின்னால் ணிஙீசிபிகிழிநிணி இருப்பதாக மக்கள் சந்தேகப்படுகிறார்கள். கூவத்தூரையே மிஞ்சும் அளவிற்கு நீங்கள் அடிக்கிற கூத்தைப் பார்க்கும்போது, இந்த அரசு எத்தனை நாட்களுக்கு நீடிக்கப்போகிறதோ என்ற ஐயம் மக்களுக்கு வரத்தொடங்கிவிட்டது.

நடப்பதையெல்லாம் பார்த்து,'பெரிய தவறை செய்துவிட்டோமோ' என உங்களுக்கு வாக்களித்த மக்களே நினைக்கத் தொடங்கியுள்ளனர். இதை பிரதிபலிக்கும் வகையில் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் வெளிநடப்பு செய்கிறோம்.

மகளிர் உரிமைத் தொகைக்காக காத்திருக்கிறார்கள். குழந்தைகள் காலை உணவுத் திட்டத்துக்காக காத்திருக்கிறார்கள். நீங்கள் அவகாசம் கேட்டீர்கள். எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால், காத்திருப்பவர்களை ரொம்ப காலம் காத்திருக்க வைத்து விடாதீர்கள். இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் ஆட்சியாக இல்லாமல் ரியல் ஆட்சியாக நடத்துங்கள். மக்கள் கேட்பதும் அதைத் தான்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிக்கோவில் போலீசாரிடம் சிக்காத செந்தில்குமார் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க நீதிமன்றம் முடிவு

ஈரோடு மே,14- ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோவில் காவல் நிலையத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு பதியப்பட்ட வழக்கின் (குற்ற எண்: 69/2013 U/S 454, 390 IPC) கீழ் குற்றம் சாட்டப்பட்ட செந்தில்குமார் (த/பெ. அய்யப்பன்) என்பவர் நீண்ட காலமாகத் தலைமறைவாக உள்ளார். திருப்பூர் மாவட்டம் வீராண்டி பகுதியைச் சேர்ந்த இவரைக் கண்டுபிடிக்க இயலாததால், அவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை (Warrant) பெருந்துறை J.M. நீதிமன்றத்தால் திரும்பப் பெறப்பட்டுள்ளது. இதனையடுத்து, தலைமறைவாக உள்ள செந்தில்குமார் வரும் 14.05.2026ஆம் தேதிக்குள் பெருந்துறை J.M. நீதிமன்றத்திலோ, அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது கிராம நிர்வாக அலுவலகத்திலோ ஆஜராக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில், அவர் நீதிமன்றத்தின் மூலம் முறையாக "தேடப்படும் குற்றவாளி" என அறிவிக்கப்படுவார் என்று காஞ்சிக்கோவில் காவல் ஆய்வாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

■ தென்காசி மாவட்டம் பழைய குற்றாலம் பகுதியில் சுற்றுலாத் துறையின் சார்பில் அருவி பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வன அலுவலர் முனைவர்.ராஜ்மோகன், இ.வ.ப., உள்ளார்.

■ "ரங்கசாமி எனும் நான்" புதுச்சேரி மாநிலத்தின் முதலமைச்சராக 5 வது முறையாக கடவுள் மீது ஆணையிட்டு பதவி ஏற்றுக்கொண்டார். புதுவை முதலமைச்சர் ரங்கசாமியை தொடர்ந்து அமைச்சராக நமச்சிவாயம் பதவி ஏற்றுக்கொண்டார். அமைச்சராக தெலுங்கில் பதிவு ஏற்றுக் கொண்டார் மல்லாடி கிருஷ்ணா ராவ்.

■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார்,மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உறுப்பு தானம் செய்து மறைந்த தேவநாதன் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.மதுரை மாவட்டம், தெத்தூர் அருகே கொழிஞ்சிப்பட்டி, கிழக்குத் தெருவைச் சேர்ந்த தேவநாதன் மறைவிற்குப் பின்னர், அவரது குடும்பத்தினர் உயர்ந்த மனிதநேய உணர்வுடன் உறுப்பு தானத்திற்கு ஒப்புதல் அளித்தனர். அவரது இரண்டு சிறுநீரகங்கள், கல்லீரல் மற்றும் பிற உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டு, பலரின் உயிரைக் காக்கும் அரிய கொடையாக அமைந்துள்ளது. மறைந்தவரின் குடும்பத்தினருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன், அவர்கள் எடுத்துள்ள இந்த தன்னலமற்ற மற்றும் தியாகமிக்க முடிவிற்கு மனமார்ந்த பாராட்டுகளையும் தெரிவித்தார்.

■ புக்குளம் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் மக்கள் குடிநீர் இல்லாமல் பத்து நாட்களுக்கு மேலாக அவதிப்பட்டு வந்தனர் இதை உடுமலை சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ. ஜெயக்குமார் அவர்களிடம் தெரிவித்தனர். இதை அறிந்து உடனடியாக விசாரித்து லாரி மூலமாக புக்குளம் அடுக்குமாடி குடியிருப்பு மக்களுக்கு தண்ணீர் வழங்கினார். மக்கள் மகிழ்ச்சி அடைந்து எம்.எல்.ஏ. மு.ஜெயக்குமார் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

■ புதுச்சேரி மே13 புதுவை சட்டசபை தேர்தலில் 30 எம்எல்ஏ தேர்வு செய்யப்பட்டனர். இதில் ரங்கசாமி 2 தொகுதியில் வெற்றி பெற்றார்.புதுவை முதல் அமைச்சராக ரங்கசாமி பதவி ஏற்றார். தொடர்ந்து எம்எல்ஏ பதவியேற்பு விழா வருகிற 18ம் தேதி சட்டசபையில் நடக்கிறது இதற்காக தற்காலிக சபாநாயகர் ராஜவேலு நியமிக்கப்படுகிறார். அவருக்கு கவர்னர் கைலாஷ்நாதன் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். தற்காலிக சபாநாயகர் ராஜவேலு 18ம் தேதி சட்டசபையில் எம்எல்ஏக்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார்.

புளியங்குடியில் தொழிற்சங்கங்கள் சீற்றம்! சிலிண்டர் விலை உயர்வு மற்றும் தொழிலாளர் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போர் முரசு

புளியங்குடி மே 14- தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே உள்ள புளியங்குடி டி.என். புதுக்குடி பேருந்து நிலையம் முன்பு மத்திய தொழிற்சங்கங்கள் சார்பில் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டெல்லி, நொய்டா உள்ளிட்ட பகுதிகளில் போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், வணிக சிலிண்டர் விலை உயர்வை கண்டித்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்திற்கு ஏ.ஐ.டி.யு.சி (AITUC) மாவட்ட பொதுச் செயலாளர் சுப்பையா தலைமை வகித்தார். சி.ஐ.டி.யு (CITU) மணிகண்டன், தொ.மு.ச (LPF) மாவட்ட செயலாளர் நெல்சன், ஐ.என்.டி.யு.சி (INTUC) மாவட்ட தலைவர் அரசையா, சி.பி.ஐ (CPI) மாவட்டச் செயலாளர் இசக்கித்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முக்கிய கோரிக்கைகள்: ஒப்பந்த தொழிலாளர்களுக்கு 10 முதல் 13 மணி நேர வேலைக்கு வெறும் 10,000 முதல் 12,000 ரூபாய் மட்டுமே சம்பளம் வழங்கப்படுவதைக் கண்டிப்பது. கூடுதல் வேலை நேரத்திற்கு இரட்டை ஊதியம், இ.எஸ்.ஐ (ESI), பி.எஃப் (PF) மற்றும் வேலை பாதுகாப்பை உறுதி செய்தல். போராடும் தொழிலாளர்கள் மற்றும் தலைவர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளைத் திரும்பப் பெற்று, அவர்களை உடனடியாக விடுதலை செய்தல். குறைந்தபட்ச சம்பளம் 26,000 ரூபாய் வழங்க வலியுறுத்தல் மற்றும் தொழிலாளர் சட்ட விரோத தொகுப்புகளைத் திரும்பப் பெறுதல் உள்ளிட்ட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யு.டி.யு.சி (UTUC) மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியன், விசைத்தறி தொழிலாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களைச் சேர்ந்த திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பினர்.

■ தென்காசி மாவட்டம்தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோரை தமிழக வெற்றி கழகத்தின் தென்காசி மாவட்ட நிர்வாகிகள் நியாஸ், மாரியப்பன், மற்றும் ராஜ பிரகாஷ், ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து மாவட்ட நலன் சார்ந்த கோரிக்கை மனுவை அளித்தனர். மேலும் தென்காசி மாவட்டத்தில் எந்த ஒரு சலசலப்பும் இல்லாமல் அமைதியான முறையில் சட்டமன்ற தேர்தலை நடத்தி முடித்த மாவட்ட ஆட்சியருக்கு தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

சுயதொழில் முனைவோராக மாறும் மலைவாழ் மக்கள்! கோவை கரும்பு ஆராய்ச்சி மையம் மற்றும் மருத்துவர்கள் குழுவின் சிறப்பான முயற்சி

திருப்பூர் மே,14- திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அமராவதி வனச்சரக புலிகள் காப்பக அலுவலகத்தில், மத்திய அரசின் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்தின் கீழ் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம், உடல் ஆரோக்கியம் மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன.கோவை கரும்பு இன விருத்தி மற்றும் ஆராய்ச்சி மையப் பொறுப்பாளர் டாக்டர் பிரகாசம் தலைமையில், அமராவதி வனச்சரகர் புகழேந்தி முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் மலைவாழ் மக்கள் கரும்பு பயிரிடுதல், சிறுதானியங்கள் மூலம் உணவுப் பொருள் தயாரிப்பது மற்றும் அவற்றைச் சந்தைப்படுத்துவது குறித்துப் பேராசிரியர்கள் பயிற்சி அளித்தனர்.ஆரோக்கிய பாதுகாப்பு: ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் இரத்த சோகை குறைபாடுகளைக் கண்டறிந்து சரிசெய்ய மருத்துவர்கள் குழு மூலம் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன. விவசாய உபகரணங்கள்: மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விவசாயக் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.முக்கிய பங்கேற்பாளர்கள்: இந்நிகழ்ச்சியில் டாக்டர் கோபி, பயிற்சிப் பேராசிரியர் சரஸ்வதி ஈஸ்வரன், டாக்டர் ஈஸ்வரன், டாக்டர் ஹரி (கோவை பி.எஸ்.ஜி) மற்றும் பழங்குடியினத் தலைவர் வெள்ளையம்மா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

■ புதுவையில் ஐந்தாவது முறையாக முதல்வர் பதவியேற்கும் மக்கள் முதல்வர் ரங்கசாமி அவர்களுக்கு S.S. அழகு @ அழகானந்தம் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

இலங்கை கடற்படையின் அட்டூழியம்! மணக்குடி மீனவர்கள் 6 பேர் கைது

அகரக்கட்டு லூர்து நாடார் கடும் கண்டனம்

கன்னியாகுமரி, மே, 14- கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியைச் சேர்ந்த 6 மீனவர்கள் மண்டபம் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவத்திற்குத் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை மீட்கத் தமிழக முதல்வர் மத்திய அரசுடன் இணைந்து உடனடி பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். கச்சத்தீவு விவகாரம்: 1974 மற்றும் 1976ல் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்து 50 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், எல்லை தாண்டியதாகக் கூறித் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது வேதனைக்குரியது. புறக்கணிப்பைச் சுட்டிக்காட்டுதல்: வணிகர்களுக்கோ, விவசாயிகளுக்கோ பாதிப்பு என்றால் போராடும் சங்கங்கள், கோடிக்கணக்கான மக்களுக்கு உணவளிக்கும் மீனவர்கள் பாதிக்கப்படும்போது முன்வருவதில்லை.பொதுவான தொழில்: மீன்பிடித் தொழிலை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் மட்டும் செய்யவில்லை; தமிழகத்தின் அனைத்துச் சமய மற்றும் சமுதாய மக்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தின் உணவுத் தேவையில் மூன்றில் ஒரு பகுதியை நிவர்த்தி செய்யும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க வணிகர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் மற்றும் பொதுநலச் சங்கங்கள் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும் என அவர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

காரைக்குடியில் பரபரப்பு: நாதக மாநில நிர்வாகி திடீர் தற்கொலை

காரைக்குடி:மே, 14- சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, சத்யா நகரை சேர்ந்தவர் பிரபாகரன் (31). நாம் தமிழர் கட்சி இளைஞர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளராக இருந்தார். பொறியாளரான பிரபாகரன், கட்டிடம் கட்டிக்கொடுக்கும் பணி செய்து வந்தார். இவருக்கு மனைவி, 2 வயதில் மகன் உள்ளனர். இந்நிலையில் பிரபாகரன் நேற்று தனது வீட்டில் திடீரென தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். தகலவறிந்து காரைக்குடி தெற்கு போலீசார் வந்து, அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும், வழக்கு பதிந்து தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர். காரைக்குடி தொகுதியில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்த மனவருத்தம் காரணமாக தற்கொலை செய்தாரா அல்லது குடும்ப பிரச்னை, கடன் பிரச்னை காரணமா என போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000